Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC 39/2021

**P.W**.1

Name : **திரு.ராதாகிருஷ்ணன்**
Father/Husband Name : திரு.கோவிந்தசாமி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.09.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது திருக்கழுக்குன்றத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த லிங்கேஸ்வரன் என்னுடைய அண்ணன் மகன் ஆவார்.

2)கடந்த 8.11.2018 அன்று மாலை 7 மணி அளவில் லிங்கேஸ்வரன் அவரது பல்சர் வாகனத்தில் வீட்டிலிருந்து கல்பாக்கம் நோக்கி சென்றுக் கொண்டிருந்த போது வி எஸ் ஸ்கூல் அருகே எதிரே வந்த வேன் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் லிங்கேஸ்வரனுக்கு தலையின் பின்பக்கம் பலத்த காயம் ஏற்பட்டது. எனது வீடு அந்த இடத்திற்கு அருகில் உள்ளது. விபத்து குறித்து கேள்விப்பட்டு நான் சென்று பார்த்தேன். அவரை ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். பிறகு சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்த்தோம். அவர் சிகிச்சை பலனில்லாமல் இறந்துவிட்டார். அவர் சிகிச்சையில் இருந்த போது விபத்து

குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுத்த வுடன் போலிசார் விபத்து நடந்த இடத்திற்கு வந்தார்கள். நானும் சாட்சி துரையும் போலிசாருடன் அப்போது சென்றோம். அன்றே சம்பவ இடத்தை பார்வையிட்டு போலிசார் குறித்துக் கொண்டார்கள். காவல் நிலையத்தில் வைத்தும் கையெழுத்து வாங்கினார்கள்.

Taken down by me in open Court read over in the Witness in the presence of the accused and admitted by the Witness to be correct.

(Sd) A.Kadhiravan,
J.M/TKM.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC 39/2021

**P.W**.2

Name : **திரு.துரை**
Father/Husband Name : திரு.பார்த்தசாரதி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.09.2023

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.** நான் தற்போது புதுமேட்டுதெருவில் குடியிருந்து டிசைன்ஒர்க் வேலை செய்து வருகிறேன். சாட்சி கணேசனை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2)கடந்த 2018ம் வருடம் ஒரு நாள் நானும் சாட்சி கணேசனும் வி எஸ் ஸ்கூல் அருகே விபத்து நடந்த இடத்திற்கு அருகே வந்தோம். அப்போது போலிசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்டு போலிசார் படம் வரைந்தார்கள். பார்வை மகஜரில் சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டதன் படி நானும் சாட்சி கணேசனும் சாட்சி கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

புகார்தாரர் ராதாகிருஷ்ணன் எனது உறவினர் என்றால் சரிதான். அ.சா.1ன் அண்ணன் மகன் லிங்கேஸ்வரனுக்கு விபத்து ஏற்பட்டது குறித்து எனக்கு தெரியும். விபத்து நடந்த அன்றே போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். படம் வரைந்த பேப்பரில் தான் நான் கையெழுத்து செய்ததாக சொல்கிறேனா என்றால் ஆமாம். விபத்து நடந்த விதம் குறித்து எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the Witness in the presence of the accused and admitted by the Witness to be correct.

(Sd) A.Kadhiravan,
J.M/TKM.